விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 343 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 11 செவ்வாய்க்கிழமை (26.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மாவீரர் தினம் நாளை
### உணர்வுபூர்வ அஞ்சலிக்கு தாயகத்திலும் புலத்திலும் ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

மண்ணின் விடுதலைக்காக தமிழ் மக்களின் உரிமைக்குரலாக இருந்து தம் இன்னுயிரை ஈகம் செய்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் வாரத்தின் பிரதான நிகழ்வான கார்த்திகை 27 மாவீரர் தினம் நாளை புதன்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் இன்று



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் 70ஆவது பிறந்தநாள் இன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வல்வெட்டித்துறையில் 1954 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பிறந்த 15

## உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கான முக்கிய அறிவித்தல்

(கொழும்பு)

பலத்த மழை காரணமாக அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் அருகிலுள்ள பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள் 15

## நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்களின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் இம்மாதம் 10ஆம் திகதி கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் 15

## 32 இலங்கையர்கள் குவைத்திலிருந்து நாட்டுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

குவைத்தில் தண்டனை அனுபவித்துவந்த 104 இலங்கை கைதிகளில் 32 பேர் நாட்டுக்கு அனுப்பப் 15

## புயல் நகரும் வேகத்தில் மாற்றம்
# வடக்கில் இடி மின்னலுடன் கன மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் வடக்கில் இன்று இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு உண்டு. யாழ்ப்பாணத்திலும் மாலை முதல் கன மழை கொட்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)




## பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளுக்கு இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயார்
### ஜனாதிபதியுடன் சீனத் தூதுக்குழு



(கொழும்பு)

பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளுக்கு இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயார் என சீனத் தூதுக்குழு ஜனாதிபதி அநுரவிடம் உறுதியளித்துள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 16

## யாழ்., முல்லை இளைஞர்கள் ரஷ்ய இராணுவத்தில் இணைப்பு
### பிரான்ஸ் அனுப்புவதாகக்கூறி இராணுவத்தில் இணைத்த முகவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் இருந்து பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல முயற்சித்த 15

## மறுஅறிவித்தல் வரை கடற்பரப்புக்குள் செல்லாதீர்
### மீனவர்கள், கடற்படைக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரை நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளுக்குச் செல்லவேண்டாம் என கடற்படை மற்றும் மீனவ சமூகங்களுக்கு வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புதன்கிழமை முதல் நாளை (நவம்பர் 27) 16

## உ/த பரீட்சைக்கு எதிராக மனு

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை 16

## மறு அறிவித்தல் வரை
### நெடுந்தீவுக்கான படகு சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கிடையிலான படகுச் சேவைகள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

வடக்கில் நிலவும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேச சபை

### 01.01.2025 முதல் 31.12.2025 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 26.11.2024 தொடக்கம் 10.12.2024 வரை
அலுவலக நாட்களில் :- மு.ப 09.00 பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 11.12.2024 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 11.12.2024 மு.ப 10.00 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | மாத வாடகை | 2025 இற்கான கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| **கச்சாய் உப அலுவலகம்** | | | | | |
| 1 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 01 | 1,000.00 | 133,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 2 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 02 | 1,000.00 | 125,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 3 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கட்டண மலசலகூடம். | | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| **வரணி உப அலுவலகம்** | | | | | |
| 4 | வரணி பொதுச்சந்தை | | 50,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 5 | வரணிஇயற்றாலை பொதுச்சந்தை | | 29,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 6 | வரணி ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 171,000.00 | 10,000.00 | 1,000.00 |
| **கைதடி உப அலுவலகம்** | | | | | |
| 8 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 225,000.00 | 20,000.00 | 1,000.00 |
| **மிருசுவில் உப அலுவலகம்** | | | | | |
| 9 | மிருசுவில் பொதுச்சந்தை | | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 10 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | | 45,600.00 | 1,000.00 | 1,000.00 |
| **நாவற்குழி உப அலுவலகம்** | | | | | |
| 26 | நாவற்குழி பொதுச்சந்தை | | 25,650.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு**

மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 14.10.2024ஆம் திகதிய தினக்குரல், வலம்புரி பத்திரிகையில் பார்வையிடவும். அல்லது பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021 205 0356 என்னும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை.** (C-1659) **26.11.2024**

# மன்னிப்பு கோரினார் மருத்துவர் அர்ச்சுனா

எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்தமைக்காக பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹனதீரவிடம் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

பத்தாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று (25) இடம்பெற்றபோதே பாராளுமன்றப் பொதுச் செயலாளரிடம் இவ்வாறு மன்னிப்புக் கோரினார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது,

நான் தெரிந்து அந்த ஆசனத்தில் அமரவில்லை. அது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனமென எனக்குத் தெரியாது. அந்த ஆசனத்தில் அமர்வதால் சிக்கல் ஏற்படுமென்றும் நான் அறிந்திருக்கவில்லை. அது துரதிஷ்டவசமாக இடம்பெற்ற ஒரு நிகழ்வு. அதற்காக நான் பகிரங்கமாக மன்னிப்பு கோருகிறேன் என்றார்.(ம-7)

# தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடுகின்றது

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மீண்டும் கூடவுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு தேர்தல்கள் ஆணைக்குழு கூடுவது இதுவேமுதல்முறையாகும்

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கிணங்க இத்தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பில் இக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது. தேர்தலை நடத்துவதற்கு இது வரை பணம் ஒதுக்கப்படாத நிலையில் இது தொடர்பிலும் இந்த கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இந் நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும் என அண்மையில் கண்டியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)




# தொடர்ச்சியாக மழை ஒட்டுசுட்டானில் 137 பேர் முகாங்களில் தங்க வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற் குட்பட்ட பண்டார வன்னி கிராமத்தில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளமையால் தொடர்ச்சியாக மழை பெய்யும் சாத்தியம் இருப்பதனால் அக்கிராமத்தில் உள்ள மக்களை அயலிலுள்ள பாடசாலைக்குச் செல்லுமாறு அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தகவல் விடுத்துள்ளனர்.

இதனையடுத்து ஒட்டுசுட்டான் பண்டார வன்னி கிராமத்தில் 45 குடும்பங்களை சேர்ந்த 137 அங்கத்தவர்கள் கரிவேலங்கண்டல் அ.த.க பாடசாலை இடைத் தங்கல் முகாமில் தற்போது தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் கிடாஅடைஞ்சான் ஆறு, குருவிச்சை ஆறும் குறுக்கறுத்து பாய்வதனால் வெள்ளம் கிராமத்தினை பாதிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதனாலே குறித்த பகுதி மக்கள் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் அனர்த்த கிராம சேவையாளர், சமுர்த்தி அலுவலகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைந்து குறித்த கிராம மக்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(ம-7,299)

## ஓமந்தையில் குளம் உடைப்பு

# 82 ஏக்கர் விவசாய நிலம் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தை, பாலமோட்டை பகுதியில் அமைந்துள்ள மடத்துவிளாங்குளம் உடைப்பெடுத்தமையால் இக்குளத்தின் கீழ் உள்ள 82.84 ஏக்கர் விவசாய நிலம் நீரில் மூழ்கியுள்ளது.

வவுனியாவில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து ஓமந்தை, பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மடத்துவிளாங்குளத்தின் குளக்கட்டில் ஏற்பட்ட உடைப்புக் காரணமாக அக்குளத்தின் கீழான 82.84 ஏக்கர் விவசாய நிலம் நீரில் மூழ்கியுள்ளதுடன், அப் பகுதிக்கான வீதிப் போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது.

குறித்த குளமானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் இருந்துள்ளதுடன், விவசாயிகளே சிறிய திருத்த வேலைகளை கடந்த காலத்தில் செய்திருந்தனர். தற்போது குளம் உடைப்பெடுத்து பாய்ந்து வருவதனால் அதன் கீழான நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

குறித்த குளத்தின் உடைப்பைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் கமக்கார அமைப்பினருடன் இணைந்து முயற்சி செய்த போதும் அது பயனளிக்கவில்லை. தண்ணீர் தொடர்ந்தும் வெளியேறி வருகின்றது.

(ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் மூழ்கிய வட்டுவாகல் பாலம்

## வீதி எது? கடல் எது? என தெரியாத நிலையில் பயணிப்போர் அச்சம்!

**(நெளுக்குளம்)**

**முல்லைத்தீவு பரந்தன் ஏ 35 வீதியில் காணப்படும் வட்டுவாகல் பாலத்தினை மூடி மழை வெள்ளநீர் பாய்வதனால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.**

கனமழை பெய்துவரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக மழை தொடர்ச்சியாக பெய்துவருகின்றது.

இதனால் நந்திக்கடல் நீர் மட்டம் நிரம்பியுள்ளது. இதனால் வட்டுவாகல் பாலத்தின் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தினை மூடியதுடன் நீர் பாய்ந்தோடாமல் தேங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது.

அத்தோடு பாலத்தின் அணைக்கட்டுகள் சரியாக தெரியாமலிருக்கின்றது, பாலத்தின் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இதனால் வீதி எது கடல் எது என தெரியாத நிலையிலையே பயணிகள் பயணம் செய்யவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விபத்து ஏற்படக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளது. இதனால் வட்டுவாகல் பாலத்தின் இரு கரையிலும் பொலிஸார், கடற்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (6-8-299-315)





# அர்ச்சுனா எம்.பியின் சமூக ஊடக கணக்குகள் ஆராயப்படும்

## சபாநாயகர் அசோக ரன்வல



(கொழும்பு)

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சமூக ஊடக கணக்குகள் ஆய்வு செய்யப்படும் எனவும் அவரது கருத்து தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படும் எனவும் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "பாராளுமன்றத்தில் சர்ச்சைக்குரிய சம்பவம் இடம்பெற்றபோது சபாநாயகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே அது குறித்து கருத்துத் தெரிவிப்பதற்கு முடியாது. எவ்வாறு இருப்பினும் குறித்த சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடப் படும்.

அத்துடன் அவர் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு முன்னரே தாம் ஈழம் தொடர்பான கருத்துகளை முன்வைத்ததாக



இராமநாதன் அர்ச்சுனா கூறுகிறார். அவரது நோக்கம் என்னவென்பது தெரியவில்லை.

எனவே, அவரது சமூக ஊடக கணக்குகள் ஆராயப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்" இவ்வாறு சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தெரிவித்துள்ளார். (6-8)

# புதிய எம்.பி.க்களுக்கு பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஒரு உன்னத அமைப்பாக மீளமைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் புதிய உறுப்பினர்களுக்கான நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று இடம் பெற்றது. இந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

22 பெண் எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டதன் மூலம், எமது பாராளுமன்றம் வரலாற்றில் பெண்களின் அதிகூடிய பிரதி நிதித்துவத்தை குறிப்பிடும் வகையில் இந்தப் பாராளுமன்றம் அரசியல் நடைமுறையில் ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும் என தெரிவித்தார். (6-8-60)

# வீடுகளை ஒப்படைக்காது வெளிநாடு சென்றுள்ள

## முன்னாள் எம்.பிக்கள்

(கொழும்பு)

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகளை வழங்காமல் 5 முன்னாள் உறுப்பினர்கள் வெளிநாட்டில் தங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 80 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 20 உறுப்பினர்களின் வீடுகள் மட்டுமே ஒப்படைக்கப்பட்டு உள்ளதாக பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடனடியாக வீடுகளை ஒப்படைக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகள் நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெல வீடுகள் வழங்கும் நடவடிக்கை அடுத்த மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந் நிலையில் வீடுகளை பொறுப்பெடுக்கும் பாராளுமன்ற அதிகாரிகள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். (6-8)

# படகு கவிழ்ந்து விபத்து தந்தையும் மகளும் மாயம்

## 5 பேர் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு முன்னக்கரை குளம் பகுதியில் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். இந்த விபத்து நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

7 பேர் நீரில் மூழ்கியுள்ளனர் அவர்களில் 5 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 50 வயதுடைய தந்தையும் 20 வயதுடைய மகளும் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிர் பிழைத்த 5 பேரில் இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காணாமல்போன இருவரையும் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரச திணைக்களங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டம்

## • வட மாகாண கல்வி திணைக்கள அணி சம்பியன்

## • யாழ்.மாவட்ட செயலக அணி 2 ஆம் இடம்





தேசிய ரீதியில் நடத்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண கல்வித் திணைக்கள அணி சம்பியன் கிண்ணத்தையும், யாழ் மாவட்ட செயலக அணி இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அரச திணைக்களங்களுக்கு இடையே அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றும் வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் வட மாகாண கல்வித் திணைக்கள அணியை எதிர்த்து யாழ் மாவட்ட செயலக அணி மோதியது. இதில் வடமாகாண கல்வித் திணைக்கள அணி தமது அபார மான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (6-8-90)

# 295 ஓட்டங்களினால் இந்தியா அபார வெற்றி



பேர்த்தில் நடந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா 295 ஓட்டங்களினால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் 534 என்ற இமாலய வெற்றி இலக்கை நிர்ணயித்த இந்தியா, அவுஸ்திரேலியாவை 238 ஓட்டங்களுக்குள் சுருட்டி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

இந்த வெற்றிக்குப் பின்னர் இந்தியா 61.11 சதவீத புள்ளிகளுடன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் (WTC) புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியது.

கடந்த நவம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமான போட்டியில் முதல் இன்னிங்ஸில் இந்தியா 150 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியும், இந்திய அணித் தலைவர் ஜஸ்பிரித் பும்ராவின் பந்து வீச்சில் திக்குமுக்காடி 104 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதனால், 46 ஓட்டத்துடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் 6 விக்கெட் இழப்புக்கு 487 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், விராட் கோலியின் சதத்துடன் இரண்டாவது இன்னிங்ஸை டிக்ளேயர் செய்தது.

பின்னர் 534 ஓட்டம் என்ற இலக்கினை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா போட்டியின் மூன்றாம் நாள் நிறைவில் 3 விக்கெட்டுகளுக்கு 12 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது.

நான்காம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பிக்க அவுஸ்திரேலிய அணி மொத்தமாக 238 ஓட்டங்களை பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. (6-8)

# ஜோர்தன் காக்ஸ் நீக்கம்




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ஜோர்தன் காக்ஸ் வலது கட்டைவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காயம் காரணமாக நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை குயின்ஸ் டவுனில் இந்த சம்பவம் நடந்தது.

காயத்தை அடுத்து காக்ஸ் ஸ்கேன் பரிசோதனைக்காக உள்ளூர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியானது நவம்பர் 28 அன்று கிறிஸ்ட்சர்சில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இங்கிலாந்து அணி, ஜோர்தன் காக்ஸுக்கு பதிலான மாற்று வீரரை இன்னும் அறிவிக்கவில்லை. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலர் கடனுதவி




(கொழும்பு)

இலங்கையின் மின்சாரத் துறையில் உள்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 200 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தொகை போட்டித் தன்மை வாய்ந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துவதற்கும் எளிதாக்குவதற்கும் மின் உற்பத்தி செலவினங்களைக் குறைப்பதற்கும் இன்றியமையாதது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தகாபுமி கடோனோ தெரிவித்துள்ளார்.

மொத்தத் தொகையில் 150 மில்லியன் டொலர் இலங்கை மின்சார சபைக்கும், 50 மில்லியன் டொலர் வரைறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்துக்கும் வழங்கப்படும்.

இரண்டு நிதியுதவிகளும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உத்தரவாதமாக இருக்கும்.

இலங்கை 2016 இல் 100% வீட்டு மின்மயமாக்கலை எட்டியது.

விநியோகிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்களிப்புகள் உட்பட 2023 இல் உச்ச தேவை சுமார் 2,800 மெகாவாட்களை (MW) எட்டியது.

மேலும் இந்த அளவு 2030 ஆம் ஆண்டில் கணிசமான அளவு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (6-8)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவத்தில் நிறுவன கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மட்டும் போதாது எனவும், தீர்வுகளை அடி மட்டத்திற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர பதவியேற்பு நிகழ்வில் நேற்று இணைந்து கொண்டபோதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி நிறுவனங்களை பலப்படுத்தி அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்கு புதிய தீர்வுகள் வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே அனர்த்த முகாமைத் துவ சட்ட முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (6-8)

துரோகிகளின் சதியில் மாண்ட

# 17 வருட நினைவில்



அமரர். சிமையானந்தகுரு பரிமளன்

மலர்வு: 29.01.1978 உதிர்வு: 26.11.2007

பாசத்தின் திருவுருக்களாய் பிறந்த
எம் அன்புத்தம்பியே கூடிழந்த பறவைகளாய்
தவிக்கின்றோம் நாங்கள்.
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறாது உம் துயரம் உனை அழித்த
அரக்கர்கள் அழியும்
காலமிது அவர்கள்-வருவார்கள்
உன்னிடமே காத்திருப்பாய் உன் துணையாய்
புலவருக்கு பின்
குட்டி புலவனாய் வலம் வந்தாய்
1. காலம் விரைவில் பதில் சொல்லும்
2. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
இறுதியில் தர்மமே வெல்லும்

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

பிரிவால் துயருறும்- அக்கா, அத்தான்.
தொடர்புகளுக்கு- 074 368 7400

(576)

# தேசிய ஆடைக்கான விருது

## இலங்கையரான மேக சூரியாராச்சி



(வியட்நாம்)

வியட்நாமில் அண்மை யில் இடம் பெற்ற "Mr World 2024" போட்டியில் இலங்கை யைச் சேர்ந்த மேக சூரியாராச்சி மக்களின் விருப்பத் தேர்வு விருதினை வென்றுள்ளார்.

இலங்கையின் கலாசாரத்தை பெருமையுடனும், அழகுடனும் வெளிப்படுத்திய மைக்காக 'தேசிய ஆடைக்கான மக்கள் தெரிவு' விருதினையும் அவர் வென்றுள்ளார். இதேவேளை இப் போட்டியின் இறுதிக் கட்டத்தில் இரண்டு விருதுகளைப் பெற்ற ஒரே போட்டியாளர் என்பதுடன் மிஸ்டர் வேர்ல்ட் போட்டியின் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்த முதல் இலங்கையர் என்ற வரலாற்றையும் மேக சூரியாராச்சி படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10

JSAC

26 கார்த்திகை 2024

"அன்பு, சமாதானம் மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு பெண்கள் மற்றும் சிறுமிகளின் குரலிற்கு செவிமடுப்போம்"

16 2024

(C-1653)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# இராசிபலன்

26.11.2024
கார்த்திகை 11, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பின்னிரவு 5.11 மணிவரை

அத்தம் முழுவதும்
சுபநேரம் -10-42-12.12 மணிவரை
இராகுகாலம் 3.12-4.42 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - சதயம்.

வளவன்

**மேஷம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**கடகம்** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், நிதி நிலை உயரும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும். வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் கூடும், பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் கூடும், வர வேண்டிய பண வரவுகள் வராமல் தாம தமாகலாம்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொதுக் காரியங்களில் நாட்டம் கூடும்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**தனுசு** தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள்.

**மீனம்** களஸ்திர நன்மையுண்டு, சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

நேர்மையான எந்த மனிதனும் திடீரென்று பணக்காரன் ஆனதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

## முன்னாயத்த நடவடிக்கைகள் தீவிரம்



(குருமன்காடு)

வவுனியா ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம். முற் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமயன் குளம் குளம் உடைப் பெடுக் கும் அபாயம் காணப்படு வதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அப்பகுதி கமநல சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய உடனடியாக அதனைத் தடுப்பதற்கான நடவடிக் கைகளை விவசாயிகள் மேற்கொண்டுள் ளனர்.

100 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலத்தை கொண்ட ராமயன்குளம் அதிகளவான மழை வீழ்ச்சியின் காரணமாக உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளது.

எனவே இப் பேரிடரை தடுக்கும் முகமாக விவசாயிகளினால் மண் மூடைகள் அடுக்கி முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (6-8-250)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 717 பேர் பாதிப்பு

## மாவட்ட இடர் முகாமைத்துவப்பிரிவு

(முறிகண்டி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலையால் 248 குடும்பங்களைச் சேர்ந்த 717 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.**




நேற்று நண்பகல் 2 மணிக்கு வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தில் குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 345 பேர் , தொண்டமான்நகர் கிராம சேவையாளர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் மற்றும் ஒரு வீடு பகுதியளவில் சேத மடைந்துள்ளதுடன் மாவடியம்மன் கிராம சேவையாளர் பிரி வில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கனகபுரம் கிராம சேவையாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர், கண்ணகிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர், இராமநாதபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர், ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும் திருநகர் கிராம சேவையாளர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர், கனகாம்பிகைக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர், திருவையாறு மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர், ஜெயந்திநகர் கிராம சேவையாளர் பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் , கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் பிரமந்தனாறு கிராம சேவையாளர் பிரிவில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர், கோக்கன்கட்டு கிராம சேவையாளர் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர், தருமபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர், உமையாள்புரம் கிராம சேவையாளர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வீடு பகுதி சேதத்துக்குள்ளானதுடன் அவ்வீட்டில் வசித்த ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தொடரும் சீரற்ற வானிலை தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இடர் கிராம சேவையாளர் ஊடாக முகாமைத்துவப்பிரிவு, பொலிஸார், இராணுவத்தினரின் உதவியை பெறுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.(6-8-100-316)

# வெள்ளநீர் தேங்கிய வீதியினை செப்பனிட்ட இளைஞர்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்கும் வீதியினை அப்பகுதி இளைஞர்கள் தன்னார்வலர் களின் நிதியுதவியுடன் சீர் செய்துள்ளனர்.

வரணி, நாவற்காடு, கரம் பைக்குறிச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மற்றும் விவசாயிகள் அதிகமாகப் பயன்படுத்துகின்ற பிரதான வீதியில் தாழ் நிலப் பகுதிகளில் மழை காலங்களில் அதிகளவான வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரணத்தால் குறித்த வீதியினூடாக போக்குவரத்து செய்ய முடியாது அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், நாவற்காடு,கரம்பைக்குறிச்சி பகுதி இளைஞர்கள் தமது நிதிப் பங்களிப்புடன் குறித்த வீதியினூடாக மக்கள் சிரமப்படாது செல்லும் வகையில், வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிகளில் மண் போட்டு சீர் செய்துள்ளனர். (6-8)

# யாழ்.பிரதேச கலாசார பேரவை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச கலா சாரப்பேரவை பொதுக் கூட்டம் எதிர்வரும் 13.12. 2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்ப் பாண பிரதேச கலாசாரப் பேரவை அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

# யாழ்.மாவட்ட காணிப் பதிவகத்தில் துரித சேவைகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட காணிப் பதிவகத்தில் துரித சேவைகள் மற்றும் தேடுதல் கடமைகள் மூன்று தினங்களுக்கு தற்காலிகமாக இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், காணிப் புத்தகங்கள் வருடல் (Scanning) செயற்பாட்டுக்கு வழங்கப் படவுள்ளதால் நேற்று முதல் நாளை வரை துரித சேவைகள் மற்றும் தேடுதல் கடமைகள் எதுவும் இடம்பெறாது என்பதுடன் சாதாரண சேவைகளில் பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பிரதிகள் நான்கு நாட்களின் பின்னரே வழங்கப் படும் என்பதனை மாவட்ட காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஏற்றுமதி செயற்றிறன் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு ஆடை ஏற்றுமதி வருவாய், ஆண்டின் இரண்டாம் பாதியில் அதன் ஆரம்ப இலக்கான 4.5 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைத் கைத்தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஆடை ஏற்றுமதி வருவாய் 2022 ஆம் ஆண்டிற்கு இணையாக இருந்தது.

எனினும், 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில், ஈட்டிய வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அவதானிக்க முடிந்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் ஆடை ஏற்றுமதி வருமானம் 299.1மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த போதிலும் ஓகஸ்ட் மாதத்தில் 485.6 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் நேர் மறையான முன்னேற்றம் காணப்படும் நிலையில் தற்போது 5 பில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டுவதற்காக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (6-8)

# இரண்டு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இரண்டு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராக மலர்மதி கங்காதரன் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத்குமாநாயக்கவினால் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (6-8)

# வீழ்ச்சி கண்ட ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக,அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 286.51 ரூபாவாகவும் 295.51ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது 286.44 ரூபாவாகவும் 295.45 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு நாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியும் அதிகரித்த அதேவேளை, ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. (6-8)


**கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் (வ-து)**

## பொதுக்கூட்டத்திற்கான பிரேரணைகள்

எமது சங்கத்தின் பொதுக்கூட்டத்தை 22.12.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே சங்கத்தின் அங்கத்தவர்கள் அபிவிருத்தி தொடர்பான தனிநபர் பிரேரணைகள் எதுவும் இருப்பின் 03.12.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**செயலாளர்,**
**கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,**
**கரவெட்டி.**

(C-1655)


# வரி விபரத்திரட்டை கோரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

(கொழும்பு)

2023/2024 ஆம் நிதியாண்டுக்கான வருமான வரி விபரத் திரட்டை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கோரியுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவித்துள்ளது.

உரிய திகதிக்குள் வருமான வரி விபரத்திரட்டை சமர்ப்பிக்கும் முறைமையைப் பொருட்படுத்தாமல் கால தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் வருமான வரி விபரத் திரட்டுகள் சட்ட நடைமுறைக்கு உட்பட்டவை என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ.சேபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வருமான வரி திரட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்களைத் துல்லியமாக உள்ளிடுவது மிகவும் முக்கியமானதாகும்.

உள்நாட்டு வருமான வரி திணைக்களத்தின் அலுவலகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி திறந்திருக்கும் என அந்த திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ ஏ.சேபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார். (6-8)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615 6719**

Western Union WU MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**



## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் 2025,2026

நல்லூர் பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சபையினது அலுவலக சட்டத்தரணியாக செயற்படுதல் மற்றும் சபைக்கு அவ்வப்போது தேவைப்படும் சட்ட ஆலோசனைகளினை எழுத்து மூலம் வழங்குவதன் பொருட்டு சபையினால் சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்**

- யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்ட விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.
- குறைந்தது 05 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் குறைந்தது 02 வருட முன் அனுபவம் முன்னுரிமையாக கொள்ளப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் 2024.11.26 ஆம் திகதியிலிருந்து 2024.12.09 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனை பணமாகச் செலுத்தி அதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரத்தினையும் இணைத்து 10.12.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடது பக்க மூலையில் "சட்ட ஆலோசனை வழங்குநர்களைப் பதிவு செய்தலுக்கான விண்ணப்பம் 2025, 2026" என குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 021-222-2700 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேச சபை.

(C-1657) 26.11.2024



## பதவி வெற்றிடம்

- **கணினி தமிழ் ரைப்பிங்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# காலநிலை நிதி ஒப்பந்தம் ஐ.நாவில் நிராகரித்த இந்தியா

(அஜர்பைஜான்)

**ஐ.நா காலநிலை மாநாட்டில் தீர் மானிக்கப்பட்டுள்ள நிதி தொகுப்பு ஒப்பந்தத்தை இந்தியா நிராகரித்துள்ளது.**




காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நிர்வகிக்க வும் காலநிலை சார்ந்த பிரச்சினைகளை சமாளிக்க வும் வளர்ந்து வரும் நாடுக ளுக்கு வளர்ந்த நாடுகள் நிதியுதவி மற்றும் தொழில் நுட்ப ஆதரவை வழங்கி வருகின்றன.

இதற்காக ஐக்கிய நாடு கள் சபையின் காலநிலை நிதித் தொகுப்பு உருவாக்கப் பட்டிருக்கிறது.

இந்த நிதித் தொகுப்பு தொடர்பாக ஐக்கிய நாடு கள் சபையின் காலநிலை மாநாட்டில் ஒப்பந்தம் செய் யப்படுவது வழக்கம். அந்த வகையில், கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ் வொரு ஆண்டும் 100 பில் லியன் டொலர் வழங்க இல க்கு நிர்ணயிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இது தொடர்பாக அஜர்பை ஜானில் நடைபெற்ற கால நிலை மாநாட்டின் நிறைவு நாளில் நிதித் தொகுப்பு குறி த்த பேச்சுவார்த்தை நடை பெற்றது.

இதில் காலநிலை நிதித் தொகுப்பை மூன்று மடங்கு உயர்த்த தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

இதனால் 2035 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 300 பில்லியன் டொலர்கள் வழங்க முடிவு செய்யப்பட் டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை இந் தியா நிராகரித்துள்ளது. மாநாட்டின் நிறைவில் இந் தியா சார்பில் பங்கேற்ற பொருளாதார விவகாரத் துறை ஆலோசகர் காந்தினி ரெய்னா, "இந்த நிதி மிக வும் குறைவான ஒன்று. மற்றும் மிகவும் தாமத மானது. வளர்ந்த நாடுகள் தங்களின் பங்களிப்பை வழங்க விரும்பவில்லை என்பதை இந்த முடிவு தெளி வாக எடுத்துரைக்கிறது. நாங்கள் ஏமாற்றம் அடைந் துள்ளோம்," எனத் தெரிவித் துள்ளார். (6-8)

## பாகிஸ்தானில் பேரணி இம்ரானின் ஆதரவாளர்கள் கைது




(இஸ்லாமாபாத்)

முன்னாள் பிரதமரை சிறையில் இருந்து விடுவிக்கக் கோரி பாகிஸ்தானில் நடந்த பேரணியில் ஆயிரக்கணக் கான இம்ரான்கான் ஆதர வாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்ரான்கான், கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் இருந்து வருகிறார். மேலும் அவர் மீது 150 குற்ற வியல் வழக்குகள் உள்ளன.

ஆனால் அவருக்கும் அவ ரதுபாகிஸ்தான் தெஹ்ரீக்-இ- இன்சாஃப் (பிடிஐ) கட்சிக்கும் மக்களிடையே இப்போதும் ஆதரவு உள்ளது.

இம்ரான்கான் ஆதரவா ளர்கள் சமூக வலைதளங்கள் மற்றும் நேரடி போராட்ட ங்கள் மூலம் அவரை விடு விக்க வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடு த்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, பாகிஸ்தான் அரசு தலைநகர் இஸ்லாமாபாத் நகருக்குள் போராட்டக்காரர்கள் நுழை வதைத் தடுக்க எல்லையில் கொள்கலன்களை வைத்த னர்.

மேலும், முக்கிய சாலை களை துண்டித்து, பிடிஐ கட்சி வலுவாக உள்ள பஞ்சாப் மற்றும் கைபர் பக்துன்குவா மாகாணங்களுடன் நகரை இணைக்கும் தேசிய நெடுஞ் சாலைகளையும் மூடியிருந் தனர்.

அந்த தடைகளையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 4,000 இற்கும் மேற்பட்ட இம்ரான்கான் ஆதரவாளர் களை பொலிஸார் கைது செய்துள்ளதாக கிழக்கு பஞ் சாப் மாகாணத்தின் பாது காப்பு அதிகாரி ஷாகித் நவாஸ் தெரிவித்தார்.

பஞ்சாப் மற்றும் கைபர் பக்துன்க்வா எல்லையை ஒட் டிய நெடுஞ்சாலையில் காவல் துறையினர் போராட்டங் களை கலைப்பதற்காக கண் ணீர்புகை குண்டுகளை வீசிய தாகவும் கூறப்படுகிறது. (6-8)

## ரஷ்யாவின் எதிர்த்தாக்குதலால் அதிக நிலப்பரப்பை இழந்த உக்ரைன்

(கீவ்)

ரஷ்ய படையினரின் எதிர்த்தாக்குதல்களின் விளை வாக, கடந்த ஆகஸ்ட் முதல் அதன் கட்டுப்பாட்டில் இருந்த குர்ஸ்க் பிராந்தியத்தின் 40% இற்கும் அதிகமான நிலப் பரப்பை உக்ரைன் இப்போது இழந்துள்ளதாக உக்ரேனிய ஆயுதப் படைகளின் தகவல் களை மேற்கொள்காட்டி சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



முன்னதாக நாங்கள் சுமார் 1,376 சதுர கிலோ மீற்றர்கள் நிலப்பரப்பை கைப் பற்றினோம். இப்போது நாங் கள் அவற்றில் ஏறக்குறைய 800 சதுர கிலோமீற்றர்கள் நிலப்பரப்பை மாத்திரம் கட்டுப்படுத்துகிறோம் என்று உக்ரேனிய ஆயுதப் படை தகவல்கள் கூறுகின்றன.

ஆதாரங்களின்படி சுமார் 575,000 ரஷ்ய படையினர் தற்போது உக்ரைனில் சண்டை யிடுகின்றனர். மேலும் ரஷ்யா தனது படையினர் எண்ணிக் கையை 690,000 ஆக அதிகரிக்க விரும்புகிறது.

டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை உள்ளடக்கிய டொன்பாஸ் முழுவதையும் ஆக்கிரமித்து, குர்ஸ்க் பிராந்தியத்தில் இரு ந்து உக்ரேனிய படையி னரை வெளியேற்றுவதே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் முக்கிய நோக்கங் கள் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள் ளார். (6-8)

## இந்தியப் பெருங்கடலில் விபத்துக்குள்ளான படகு

### 24 பேர் பலி; 46 பேர் மீட்பு

(இந்தியா)

இந்தியப் பெருங்கடல் அருகே 2 படகுகள் விபத்திற் குள்ளானதில் சோமாலியா நாட்டைச் சேர்ந்த 24 பேர் உயிரிழந்தனர் என வெளி நாட்டுச் செய்திகள் தெரிவித் துள்ளன.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவைச் சேர்ந்த பலர் பொருளாதார வாய்ப்பு களைத் தேடி ஐரோப்பாவுக் குள் நுழைய ஆபத்தான கடல்வழி பயணத்தை மேற் கொள்கின்றனர்.

இந்த பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டுப் பல உயி ரிழப்புகள் ஏற்படுகின்றன.

இந்நிலையில், சோமா லியாவைச் சேர்ந்த 70 பேர் 2 படகுகளில் இந்தியப் பெருங் கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஆபத்தான பய ணத்தை மேற்கொண்டனர்.

அப்போது எதிர்பாராத விதமாக 2 படகுகளும் விபத் துக்குள்ளானது. இந்த விபத் தில் 24 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, விபத்தில் சிக் கிய 46 பேர் உயிருடன் மீட்கப் பட்டதாக வெளிநாட்டுச் செய்தி கள் தெரிவிக்கின்றன. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுசக்தி பேச்சுவார்த்தை பிரான்ஸ், ஜேர்மன், இங்கிலாந்துக்கு ஈரான் அழைப்பு

(டெஹ்ரான்)

**ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த வாரம் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இங்கிலாந்துடன் அணுசக்தி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஈரான் அரசு தெரிவித் துள்ளது.**










எதிர்வரும் வெள்ளிக் கிழமை நடக்கவிருக்கும் இந்த பேச்சுவார்த்தை தொடர்பில் ஈரானின் வெளி விவகார அமைச்சினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப் பட்டது.

பாலஸ்தீனம், லெபனான் பிரச்சினைகள், அணுசக்தி விவகாரம் உட்பட பல பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பாகேய் கூறினார்.

இங்கிலாந்து அதிகாரிகள் இந்தப் பேச்சுவார்த் தையை உறுதிப்படுத்தி னர்.

எனினும், பேச்சுவார்த்தை எங்கு நடைபெறும் என்பதை லண்டனோ அல்லது டெஹ்ரானோ வெளிப்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-8)

## துருக்கியில் தரையிறங்கிய விமானத்தில் தீப்பரவல்

(அங்காரா)

95 பேருடன் சென்ற ரஷ்ய விமானம் துருக் கியின் தெற்குப் பகுதியில் உள்ள அந்தாலியா விமான நிலையத்தில் தரையிறங்கும்போது, விமானத்தின் இன்ஜின் திடீரென தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இருந்தபோதி லும் பயணிகள் மற்றும் விமான பணியாளர்கள் பத்திரமாக விமானத்தில் இருந்து வெளி யேற்றப்பட்டனர் என துருக்கி போக்குவரத்துத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுகோய் சூப்பர்ஜெட் 100 வகையைச் சேர்ந்த அஜிமுத் ஏர்லைன்ஸ்க்கு சொந்த மான விமானம் சோச்சியில் இருந்து 89 பயணிகள் மற்றும் 6 பணியாளர்களுடன் சென்றபோது குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விமானம் தரையிறங்கிய தும் விமானி அவசர அழைப்பு கொடுக்க விமான நிலைய மீட்புக்குழு, தீய ணைப்புப்படை வீரர்கள் விரைவாக வந்து தீயை கட்டுப்படுத்தினர்.

தீ விபத்திற்கான கார ணம் குறித்து உடனடியாக தகவல் ஏதும் தெரிவிக் கப்படவில்லை. இந்த விபத்தை தொடர்ந்து ஓடு பாதையில் இருந்து விமானத் தை அப்புறப்படுத்தும் பணி யில் ஊழியர்கள் ஈடு பட்டனர். அது வரை விமான நிலையம் தற் காலி கமாக மூடப்பட்டது.(6-8)





## அமெரிக்க சுகாதார துறையின் முக்கிய பதவியில் இந்தியர்?

(வோஷிங்டன்)

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் பிறந்து அமெரிக்கக் குடியுரிமை பெற்று, அங்கு உள்ள ஸ்டான் போர்ட் பல் கலையின் சுகாதாரக் கொள்கை துறையின் பேரா சிரியராக உள்ள டொக் டர் ஜெய் பட்டாச்சார்யா என் பவர், அந்நாட்டின் தேசிய சுகாதார நிறுவனத் தின் தலைவராகத் தேர்வு செய் யப்பட்டுள்ளார்.



சமீபத்தில் நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதி பத விக்கான தேர்தலில், ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

இவர், 2025 ஜன வரி 20 இல் ஜனாதிபதி யாக பொறுப்பேற்க உள் ளார்.

ஆட்சி மாற்றத்திற்கான பணிகள் தொடங்கி தற்போது நடந்து வருகின் றன.

முக்கிய துறைக ளுக்கான நபர்களை ட்ரம்ப் தேர்வு செய்து வரு கிறார்.

அந்த வகையில் அமெ ரிக்க சுகாதார துறையின் முக்கிய அமைப்பான, தேசிய சுகாதார நிறு வனத்தின் தலைவராக இந்திய வம்சாவளியான ஜெய் பட்டாச்சார்யாவை ட்ரம்பின் நிர்வாக மாற்றக் குழு பரிந்துரைத்துள் ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கடன்கள்அரசிற்கு பாரிய சவாலாகும்- சம்பிக்க

(கொழும்பு)

தேசிய மற்றும் சர்வதேச கடன்கள் அரசாங்கத்துக்கு பாரிய சவாலாகும். மேலும் பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப் படைத் தன்மையுடன் முன்னெ டுக்க வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ர்ணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை தமது கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் திருத்தம் செய்வதாகத் தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு குறிப்பிட்டது.

இருப்பினும் ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாமல், கடந்த அரசாங்கம் கடைப்பிடித்த பொருளாதார கொள்கைகளையே ஜே.வி.பி அரசாங்கம் பின்பற்றுகிறது. அதேவேளை பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (6-8)

# நேருக்கு நேர் மோதி இரு பேருந்துகள் விபத்து

## நால்வர் படுகாயம்



(வட்டவளை)

வட்டவளை கரோலினா பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தொன்றும் கண்டியிலிருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தனியார் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 200-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 220 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 300 | 350 | 350 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 220 | 100-150 | 150 |
| கோவா | 180 | 200 | 200 | 250 | 250 |
| கரட் | 100 | 180 | 200 | 150 | 200 |
| பூசணி | 100 | 120 | 100 | 100 | 150 |
| புடோல் | 120 | 200 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 120 | 60-70 | 200 |
| சின்ன வெங்காயம் | 320 | 350 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 380 | 350 | 410 | 400 |
| பாகற்காய் | 400 | 500 | 800 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 100 | 120 | 200 | 100-170 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 400 | 300-400 | 450 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 180 | 150 | 300 |
| கறிமிளகாய் | 450 | 650 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 1000 | 600 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 150 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 100 | 60-80 | 200 |
| தேசிக்காய் | 600 | 700 | 400 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-160 | 120-180 |
| இராசவள்ளி | -- | 850 | 1200 | 700 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 160 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 110 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 110 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 150 | 90 | 160 |

# இன்று ஒரு தகவல் 272



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## சண்டையை நிறுத்த சரியான மருந்து!

ஒரு கணவன், மனைவி. எப்போது பார்த்தாலும் அவர்கள் இரண்டு பேருக்கும் இடையில் சண்டை வந்து கொண்டே இருக்கும். இதிலே என்ன ஆச்சரியம் என்கின்றீர்களா? நான் அதற்காக சொல்ல வரவில்லை. இது வேறு விடயம். அதாவது சண்டை போடாமல் இருப்பதற்கு வழி சொல்கின்ற தகவல் இது. நான் சொன்ன இந்தக் கணவன், மனைவி எப்படி என்றால் கணவன் ஒரு வார்த்தை சொன்னால் மனைவியிடம் இருந்து இரண்டு வார்த்தை பதிலாக வரும். இதற்கு கணவனிடம் இருந்து நான்கு வார்த்தை பதிலாக வரும். இப்படி வார்த்தைகள் பெருகிப் போய்விடும் கடைசியில் வம்பில் வந்து முடியும்.

அந்த அம்மா பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பக்கத்து வீட்டிலேயும் ஒரு கணவன், மனைவி இருக்கின்றார்கள். அவர்களுக்குள்ளே சண்டை வருவதில்லை. அது எப்படி அவர்களால் மட்டும் சண்டை போடாமல் இருக்க முடிகின்றது என்று இந்த அம்மாவிற்கு ஆச்சரியம். ஒரு நாள் நேராகப் பக்கத்து வீட்டு அம்மாவிடம் போய் ஏன் நீங்கள் இருவரும் சண்டை போடாமல் இருக்கிறீர்கள் என்று கேட்டார்.

அதற்கு ஒரு மருந்து இருக்கின்றது. அதைச் சாப்பிட்டால் சண்டை வராது என்றார் அவர். சரி அந்த மருந்தை அவர் சாப்பிடமாட்டேன் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? என்று கேட்டார் இவர். அந்த மருந்து அவருக்கு இல்லை உனக்கு தான் என்றார் அவர். அப்படியா அப்படி என்றால் மிகவும் நல்லது. அதை எப்படிச் சாப்பிடுவது என்ற விபரத்தை சொல்லுங்கள். எங்கே அது கிடைக்கும் சொல்லுங்கள் என்று கேட்டார் இவர்.

வேறு எங்கேயும் போய் வாங்க வேண்டாம் என்னிடமே இருக்கிறது அந்த மருந்து. அதிலே கொஞ்சம் தருகின்றேன். வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். உன் கணவன் உன்னிடம் சண்டையை ஆரம்பிக்கும் பொழுதெல்லாம் நீ இந்த மருந்திலே ஒரு துளியை வாயிலே ஊற்றிக் கொள்ள வேண்டும். அதை உடனே குடித்து விடக்கூடாது. ஒரு ஐந்து நிமிடமாவது அது வாயிலேயே இருக்க வேண்டும். அதன் பின் குடிக்கலாம் என்று சொல்லி ஒரு போத்தல் மருந்தை அந்த அம்மாவிடம் கொடுத்து அனுப்பினார்.

மருந்தை எடுத்துக் கொண்டு இந்த அம்மா வீட்டிற்கு வந்தார். வீடு பூட்டியிருந்ததால் கணவன் வந்து வாசலிலே காத்துக் கொண்டிருந்தார். மனைவியைக் கண்டதும் சண்டை போட ஆரம்பித்து விட்டார். வீட்டைப் பூட்டிவிட்டு எங்கே போனாய்? எவ்வளவு நேரம் ஒரு மனிதன் வாசலிலேயே காத்துக் கொண்டிருப்பது என்று கேடடார். மனைவி இதற்கு பதில் சொல்லவில்லை. அந்த அம்மா வீட்டைத் திறந்தார். சமயலறைக்குள் போனார். ஒரு துளி மருந்தை வாயில் ஊற்றிக்கொண்டார். அன்று சண்டை மேற்கொண்டு வளரவில்லை நின்று விட்டது. மருந்து பரவாயில்லை.

அதன்பின் பல சந்தர்ப்பங்களில் சண்டை வருவது போல இருக்கும் போதெல்லாம் இருந்த மருந்து அதை நிறுத்திவிடும். பிரமாதமான மருந்தாக இருக்கிறதே இது. இதைக் கொஞ்சம் அதிகமாகவே வாங்கி வீட்டில் வைத்திருக்க வேண்டியது தான் என்று முடிவு செய்து விட்டு இந்த அம்மா மறுபடியும் பக்கத்து வீட்டு அம்மாவிடம் போனார். எவ்வளவு விலையானலும் சரி நான் காசு கொடுத்து வாங்கி வைத்திருக்கின்றேன். எந்தக் கடையிலே இது இருக்கிறது சொல்லுங்கள் என்று கேட்டார். இந்த மருந்திற்கு விலையே இல்லை. இலவசமாகக் கிடைக்கும் என்றார் அவர்.

அது எப்படி விலையில்லாமல் இதை விற்க முடியும் என்று கேட்டார் இவர். அது மருந்தாக இருந்தால் தானே விலை வைக்க. அது வெறும் தண்ணீர் என்றார். வெறும் தண்ணீரா சண்டையை நிறுத்தியது என்றார் இவர். அது சண்டையை நிறுத்தவில்லை. உன்னுடைய மௌனம் தான் சண்டையை நிறுத்தியது. நீ வாயில் தண்ணீரை வைத்திருப்பதனாலே எதிர்த்துப் பேசவில்லை. அதனால் உன் கணவன் கோபம் சாந்தமாகிவிட்டது என்றார் அவர்.

இந்தக் கதையில் இருந்து சண்டையை நிறுத்துக்கின்ற மருந்து எது என்று தெரிந்து கொண்டீர்களா? இதை நானும் தெரிந்து கொண்டேன். என்னிடம் வருபவர்களுக்கு சிபாரிசு செய்யலாம என நினைத்துக் கொண்டிருந்தேன். ஒரு அம்மா வந்தார். எனக்கும் என் கணவருக்கும் அடிக்கடி சண்டை வருகின்றது என்றார். கவலைப்படாதே நான் ஒரு மருந்து தருகின்றேன் என்று சொல்லி ஒரு போத்தலை எடுத்துக் கொடுத்தேன். போத்தலில் இருப்பது என்ன என்பதை சொல்லிவிட்டால் அதன் மீது ஒரு மரியாதை வராது இல்லையா? அதனால் சொல்லவில்லை. அந்த அம்மா வாங்கிக்கொண்டு போனார். நான்கு நாட்கள் கழித்து திரும்பி வந்தார்.

என்னம்மா வீட்டிலே சண்டை நின்று விட்டதா? என்று கேட்டார். அங்கே நின்று விட்டது. இப்போது உங்களிடம் ஆரம்பம் என்றார். என்னம்மா என்றேன் பயந்து போய். பின்பு என்ன? நீங்கள் என்ன மருந்து தந்தீர்கள் என்றார் கோபமாக. அது வெறும் தண்ணீர் தானே என்றேன். தண்ணீரா இது நன்றாகப் பாருங்கள் என்று அந்தப் போத்தலை நீட்டினார். வாங்கிப் பார்த்தால் அதன்பின் தான் விடயம் புரிந்தது. நான் கை தவறுதலாக எங்கள் வீட்டில் இருந்த மண்ணெண்ணை போத்தலை எடுத்து அவரிடம் கொடுத்திருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்கியுள்ள வெள்ள நீரை அகற்றக்கோரி மன்னாரில்

## மக்கள் வீதிமறியல் போராட்டம்

**(மன்னார்)**

**மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துள்ளுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பாவிலுப்பட்டான் குடியிருப்பு கிராம மக்கள் தமது கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றக் கோரி நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



குறித்த கிராமத்தில் 108 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் இக் கிராமத்திற்குச் செல்லும் பாதைக்கு அமைப்பதற்காக நீர் வெளியேறிச் செல்லும் மதகை அவ்விடத்தில் கொண்டு வரப்பட்டு 4 வருடங்களாகிய நிலையில் அவற்றை உரிய முறையில் செப்பனிடவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

மேலும் வெள்ள நீரை தமது கிராமத்தில் இருந்து வெளியேற்ற அதிகாரிகள் யாரும் முன்வரவில்லை. இதனையடுத்து தலைமன்னார் பிரதான வீதியை மறித்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தலை மன்னார் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் குறித்த பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது பிரச்சினை குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் மக்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)

# குடியிருப்புக்குள் புகுந்த முதலை

## அச்சத்தில் மக்கள்



(தருமபுரம்)

பெய்து வருகின்ற கடும்மழை காரண மாக மக்கள் குடியிருப்பு பகு திக்குள் உள் நுழைந்த முதலை ஒன்று வீட்டுக்குள் நுழையாத வாறு வேலியில் கட்டப்பட்டிருந்த வலையில் சிக்குண்ட நிலையில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் கனமழை காரணமாக தாழ் நில பகுதியில் இருக்கும் மக்கள் கடும் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இந் நிலையில் வெள்ளத்தோடு அடித்து வரப்பட்ட முதலை ஒன்று மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்து கோழிகளை வேட்டையாடியுள்ளமையால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சத்தில் உள்ளனர். (6-8-316)



வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பா... வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று ...

# வாகனத்தின் மீது பாறி விழுந்த மரம்

## மின் இணைப்புக்களும் சேதம்



(தருமபுரம்)

பரந்தன் முல்லைத்தீவு- A35 வீதியின் சுண்டிக்குளம் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது வீதியின் அருகே தரித்து நின்ற மரம் வேருடன் சாய்ந்து வீழ்ந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மின் இணைப்புக்களும் சேதமடைந்துள்ளது.

இதன் காரணமாக குறித்த வீதியில் சிறிது நேரம் போக்கு வரத்து தடைப்பட்டது போக்குவரத்து பொலிஸார் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் இணைந்து குறித்த மரத்தை அகற்றும் நடவடிக்கையினை முன்னெடுத்து இருந்தனர். (6-8-316)

# போக்குவரத்து இடர்பாடு குறித்து ஆராய்ந்த ரவிகரன் எம்.பி



(நெளுக்குளம்)

கனமழை காரணமாக முல்லைத்தீவு - நந்திக்கடல் ஆறு பெருக்கெடுத்துள்ளமையால் வட்டுவாகல் பாலம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் குறித்த வீதியால் பயணிப்பவர்கள் கடுமையான போக்குவரத்து இடர்பாட்டினை எதிர் நோக்கியுள்ளனர். இந்நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று வட்டுவாகல் பாலத் திற்கு நேரடியாகச் சென்று, வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்தார். (6-8-299)

# பேருந்தில் பயணித்த முதியவர் கேரள கஞ்சாவுடன் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிக்கு கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்தில் குருநாகல் கொண்டு செல்வதற்காக பயணப்பொதியில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கிலோ 750 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் 64 வயதுடைய முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் மூலம் குறித்த முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 640





இப்படி ஒரு முறை யாரோ சொன்னார்கள். ஆம். அந்த வீர வைஷ்ணவன் தான். ஒருவேளை அவனே அழைத்து வந்திருக்கலாம். இல்லை. அவனால் அந்தக் காரியம் முடியவில்லை. உம்மாலேதான் அந்தக் காரியம் ஆக வேண்டும்.

அப்படியானால் என்னைக் காஞ்சிக்கு அனுப் பாதீர்கள், தேவி!" "ஏன்?" "அங்கே என் எஜமானர் இருக்கிறார். அவர் கேட்டால் நான் எல்லா விவரங்களையும் சொல்லித்தான் ஆகவேண்டும். பழுவேட்டரையர்களும் மற்றச் சிற்றரசர்களும் செய்யும் சதியைப் பற்றி அறிந்தால் உடனே வெகுண்டு எழுவார். சக்கரவர்த்தியைச் சிறைவைப்பது போல் வைத்திருக்கிறார்கள் என்று அறிந்தால் உடனே படை எடுத்துக் கிளம்புவார். பொன்னியின் செல்வரைப் பற்றிய செய்தி அவர் காதில் எட்டியிருந்தால் இதற்குள்ளேயே ஒருவேளை புறப்பட்டிருந்தாலும் புறப்பட்டிருப்பார்."

"அதற்காகவேதான் உம்மை அனுப்ப விரும்புகிறேன். அவர் காஞ்சியைவிட்டுப் புறப்படாமல் எப்படியாவது தடுத்து விடவேண்டும்." "நான் காஞ்சியை அடைவதற்குள் அவர் புறப்பட்டிருந்தால்?"

"வழியில் அவர் எங்கே இருந்தாலும் அங்கே போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள். எல்லாவற்றையும் விட முக்கியமாக நீர் அவசியம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது." சொல்லுங்கள்!

பெரிய பழுவேட்டரையர் இளையராணியுடன் கடம்பூர் மாளிகைக்குப் புறப்பட்டுவிட்டார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

"உண்மையில் இளையராணி தான் போகிறாளா! அல்லது இளையராணியின் பல்லக்கில்" இல்லை இளையராணி தான் போகிறாள். என் சித்தப்பாதான் இன்னும் இங்கே இருக்கிறாரே! எதற்காகப் போகிறார்களாம்?"

"ஆதித்த கரிகாலனையும் கடம்பூருக்கு வரும்படி அழைத்திருக்கிறார்கள். கல்யாணப் பேச்சு என்பது வெளிப்படையான காரணம்.

இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துக் கொடுத்துச் சமாதானம் செய்து வைக்கப் போவதாகவும் ஒரு பேச்சு நடந்து வருகிறது.

என் எஜமானர் அதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டார். அதைப் பற்றியெல்லாம் இப்போது எனக்குக் கவலை இல்லை. பின்பு என்ன கவலை தேவி!"

"இன்னதென்று சொல்ல முடியாத பயம் என் மனத்தில் குடி கொண்டிருக்கிறது நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொள்கிறது. அரைத் தூக்கத்தில் விபரமில்லாத பயங்கரங்கள் என்னைச் சூழ்ந்து கொள்கின்றன. நல்ல தூக்கத்தில் அகோரமான கனவுகள் கண்டு விழித்துக் கொள்கிறேன். அப்புறம் வெகு நேரம் வரையில் என் உடம்பு நடுங்கிக் கொண்டிருக்கிறது.

"இந்த நிலையில் தங்களைப் பிரிந்து என்னை ஏன் போகச் சொல்லுகிறீர்கள்? தங்களுக்கு எத்தகைய அபாயம் வந்தாலும் என் உயிரைக் கொடுத்து."

"ஐயா! என்னுடைய பயம் என்னைப் பற்றியதே அன்று. என் தமையனைப் பற்றியது. பழுவூர் ராணியைப் பற்றியது. அவர்கள் சந்தித்தால் என்ன நேரிடுமோ என்று எண்ணி என் உள்ளம் கலங்குகிறது.

அவர்கள் தனியாகச் சந்திக்க முடியாதபடி நீர் தடை செய்ய வேண்டும்." தேவி! அவர் ஏதும் செய்வதற்கு நினைத்தால் அதை யார் தடுக்க முடியும்?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முல்லாவின் புத்திசாலித்தனம்



சில காலம் முல்லா ஒரு பெரிய செல்வந்தனிடம் வேலை பார்த்து வந்தார். ஒரு நாள் முல்லா தொடர்ந்து மூன்று தடவை கடைத் தெருவுக்குச் சென்று வந்ததை அவருடைய முதலாளி கண்டு அவரைக் கூப்பிட்டு விசாரித்தார்.

நீங்கள் ஏன் மூன்று தடவை கடைக்குச் சென்று வருகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு முல்லா ஒரு தடவை கோதுமை வாங்குவ தற்காக, ஒரு தடவை முட்டை வாங்குவ தற்காக, ஒரு தடவையாக எண்ணெய் வாங்குவதற்காகச் சென்றேன் என்றார் முல்லா.

அதைக் கேட்டு முதலாளி இனி கடைக்குச் செல்லுவதற்கு முன்னால் என்னென்ன தேவை என்பதை முன்னதாகவே தீர்மானித்துக் கொண்டு சென்று வாங்கி வருதல் புத்திசாலித்தனம். ஆகவே இனி இந்த மாதிரியான தவறைச் செய்யாதே என்று முல்லாவை எச்சரித்து அனுப்பினார்.

ஒரு தடவை முல்லாவின் முதலாளியான செல்வந்தருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு விட்டது. அவர் முல்லாவை அழைத்து உடனே சென்று மருத்துவரை அழைத்து வா என்று உத்தரவிட்டார்.

சற்று நேரம் கழித்து முல்லா வீடு திரும்பிய போது அவருடன் மூன்று மனிதர்கள் வந்திருந்ததைப் பார்த்த முதலாளி, முல்லாவைப் பார்த்து நான் மருத்துவரை மட்டும்தானே அழைத்து வரச் சொன்னேன் என்றார்.

ஒரே தடவை திட்டம் போட்டு எல்லா காரியங்களையும் செய்துவிட வேண்டும் என்று நீங்கள் தானே சொன்னீர்கள் என்று கேட்டார் முல்லா. ஆமாம் அப்படித்தான் சொன்னேன். அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு? என்று ஆச்சரியம் தோன்ற கேட்டார் முதலாளி.

ஐயா, உங்களுக்கு உடல்நலம் சரியாக இல்லை. நோய் முற்றி இறந்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இறுதிப் பிரார்த்தனை செய்வதற்காக மதகுருவை ஒரு தடவை அழைக்கப் போக வேண்டும். பிறகு உங்கள் உடலைச் சமாதியில் வைப்பதற்காக புதைகுழி தோண்டுபவனை அழைக்க ஒரு தடவை போக வேண்டும்.

இவ்வாறு மூன்று தடவை மூன்று காரியங்களுக்காக நடப்பதற்கு பதில் ஒரே நேரத்தில் மூன்று ஆட்களையும் அழைத்து வந்து விட்டேன் என்றார் முல்லா. முதலாளியின் முகத்தில் ஈ ஆடவில்லை.

நீதி : முட்டாள்கள் சொல்வதை சரியாக புரிந்து செயல்பட மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

கடந்த காலங்களில் மக்களால் வெறுக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் ஒரு உன்னதமான இடமாக மாற்றுவதற்கு, அனைத்து உறுப்பினர்களும் தாம் மக்கள் பிரதிநிதிகள் என்பதை நினைவில் வைத்து வேலை செய்ய வேண்டும் என பிரதமர் ஹரிணி அமர சூரிய வலியுறுத்தியுள்ளார்.

10 ஆவது பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஆரம்பமாகியது. குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாம் இந்தப் பாராளுமன்றத்தில் எதற்காக இருக்கிறோம் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தில் அதிக பெண் பிரதிநிதித்துவத்துடன் 22 பெண் உறுப்பினர்கள் உள்ளனர். 225 இடங்களில், 162 இடங்கள் புதிய உறுப்பினர்களால் நிரப்பப்பட்டன.

புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றம் என்று அழைக்கப்படும் இந்த உயர் மன்றம் கடந்த காலங்களில் மக்கள் வெறுப்பைப் பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நிராகரிக்கப்பட்டனர். 225 பேரும் 'தேவைஇல்லை' என்று மக்கள் கருதினார்கள்.

இதுபோன்ற கருத்துக்களின் அடிப்படையில், மக்கள் இந்தப் பாராளுமன்றத்தை பொதுத் தேர்தலினூடாக உருவாக்கினார்கள்.

எனவே நாம் பொது மக்களின் பிரதிநிதிகள் என்பதை மறந்துவிடக் கூடாது. அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள் எதுவாக இருந்தாலும், நாம் மக்களின் பிரதிநிதிகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தியுள்ளார். (ம-7)

# இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கடந்த வாரத்துடன் ஒப்பிடும் பொழுது அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தநிலையில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே நேற்று 286.51 ரூபாவாகவும், 295.51 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை (22) அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது 286.44 ரூபாவாகவும், 295.45 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு நாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ள அதேவேளை, ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கொழும்பில் குழு மோதல் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு - ஒருகொடவத்தை பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் 17 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் எல்லைக்குட்பட்ட ஒருகொடவத்தையில் இரண்டு குழுக்களுக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

சிறிது காலமாக நிலவி வந்த தகராறு காரணமாக மோதல் ஏற்பட்டதாகவும் கழுத்துப் பகுதியில் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 17 வயது இளைஞன் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய வெஹரகொடெல்ல பிரதேசத்தை சேர்ந்த அசோக்குமார் தனுஷன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் இருந்து டி. மோசஸ் என்ற மற்றொரு 16 வயது இளைஞனும் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**"சாகுமுன் உன்பாட்டன் நாட்டிய பழ மரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக் கூடும்"**

# நீர்கொழும்பு களப்பில் இரு சடலங்கள் மீட்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு முன்னக்கரை களப்புப்பகுதியில் படகு விபத்தில் காணாமல் போன இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் 7 பேர் நீரில் மூழ்கிய நிலையில் அவர்களில் 5 பேர் உயிர் தப்பியதுடன் இருவர் காணாமல் போயுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போனவர்கள் நேற்றுப் பிற்பகல் நீர்கொழும்பு முன்னக்கரை ஶ்ரீவர்தன்புர குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ரணில் பெர்னாண்டோ என்ற 50 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையும் அவரது மூத்த மகளான 20 வயதான நிலுஷா நெத்மி பெர்னாண்டோவும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கனடா செல்ல முயன்ற

# யுவதி உட்பட 3 பேர் கைது

இலங்கை ஊடாக கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இந்திய யுவதி உட்பட மூவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட யுவதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் வசிக்கும் 24 வயதுடையவர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்தியன் ஏர்லைன்ஸின் AI-231 விமானத்தில் மும்பையிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 03.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

குறித்த பெண் இலங்கைக்குள் நுழைவதற்கான வீசாவைப் பெற்று, தனது இந்தியக் கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை அனுமதிக்காக குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

சோதனையின் போது பெண்ணின் கடவுச்சீட்டு, சர்வதேச பொலிஸாரின் தொலைந்து போன மற்றும் திருடப்பட்ட தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணையின் போது போலியான முறையில் கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

அதற்கமைய குறித்த யுவதி மற்றும் அவருடன் பயணித்த மேலும் இரண்டு இந்தியர்களை கைது செய்தனர்.

குறித்த மூன்று பேரும் அன்றைய தினமே இந்தியாவுக்கு மீண்டும் நாடு கடத்தப்பட்டுள்ளனர். (ம-7)

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழுங்குடி. – திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் அரசியல் தரப்புகளின் ஒற்றுமை உடனடிச் சாத்தியமா?

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் நம் அரசியல் தரப்புகளுக்குத் தக்கபாடம் புகட்டியுள்ளது.

அந்தப் பாடத்தை நம் தமிழ் மக்கள் மிகவும் நிதானமாகக் கற்பித்துள்ளனர்.

அதேநேரம் தேர்தலில் பேரட்டியிட்ட அனைத்துத் தரப்பும் இப்பாடத்தைக் கற்றுக் கொண்டதா? என்றால் இல்லை.

சில அரசியல் தரப்புகள் புலம்பெயர் அமைப்புகளின் தட்சணைக்காகத் தேர்தல் களத்தில் நின்றவை. எனவே அவற்றின் நோக்கம் தட்சணையேயன்றி வேறில்லை.

மாறாக, நாம் இங்கு குறித்துரைப்பது தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஏதோவொரு வகிபங்குடன் தேர்தலில் போட்டியிட்டவர்கள் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட வேண்டும் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு நிராகரிக்கப்பட்ட நிலையில் ஒரு புதிய அரசியல் பரிணாமம் நம் தமிழ் அரசியலில் முகிழ்த்துள்ளது.

இவ்வாறான அரசியல் நிலைமை கண்டு நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை.

அதேநேரம் தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஏற்பட்ட ஒற்றுமையீனமே தமிழர் அரசியலில் ஏற்பட்ட மாற்றத்துக்குக் காரணம் என்ற கருத்து நிலையில்; தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படுவதுதான் ஒரே வழி என்ற நிலைப்பாடும் இப்போது பொருத்தமற்றதே.

இவ்வாறு நாம் கூறுவது பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தலாம்.

ஆனால் தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதென்பது சாதாரண விடயமல்ல.

அதாவது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நம் தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படுவதற்கு இருந்த சூழமைவும் தற்போது இருக்கின்ற சூழமைவும் ஒன்றல்ல.

அப்போது தமிழ்க் கட்சிகள் தமக்குள்ளேனும் வலுவான பிணைப்பை - ஒற்றுமையைக் கொண்டிருந்தன.

ஆனால் இப்போது ஒரு கட்சிக்குள்ளேயே பிடுங்குப்பாடுகள் தொடங்கிவிட்டன. அதிலும் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் அந்தப் பிடுங்குப்பாடுகளை வைரம் பாய்ச்சி விட்டுள்ளதென்றே கூறவேண்டும்.

எனவே எடுத்த எடுப்பில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படுவதென்பது சாத்தியமாகாது. அவ்வாறானதொரு ஒற்றுமையை தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஆகவே யதார்த்தபூர்வமாகச் சிந்திப்போமாயின், இப்போதிருக்கின்ற நிலைமையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடனும் மற்றும் சர்வதேச சமூகத்துடனும் சந்திப்புக்களையும் பேச்சுவார்த்தைகளையும் நடத்துவதெற்கென ஒரு பொதுக்குழுவொன்றை அமைப்பதே பொருத்தமாகும்.

இவ்வாறு அமைக்கப்படும் குழுவில் தமிழ்ப் புத்திஜீவிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் அரசியல் பிரமுகர்கள் பிரதிநிதித்துவம் பெற முடியும்.

இந்தக் குழுவே இனப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்து விவகாரங்கள் தொடர்பில் அரச உயர்மட்டத்துடனும் இதர தரப்புடனும் கலந்துரையாட வேண்டும்.

இதற்கான ஏற்பாட்டைச் செய்வதனூடாகத் தமிழ்த் தரப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, எமது இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும்.

இதுவே சாத்தியமானதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான வழிமுறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனமழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கிய வயல்கள்





(திருமலை)
பெய்து வருகின்ற கனமழை காரணமாக மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தோப்பூர், சம்பூர், மல்லிகைத் தீவு, பள்ளிக்குடியிருப்பு உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

மேலும் மூதூர் -கட்டை பறிச்சான் இறால் பாலத்தை மேவி சுமார் 3 அடிக்கு மேல் நீர் செல்கின்றது.

அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்கள், வீதிகள் மற்றும் வீடுகள் நீரில் மூழ்கிக் காணப்படுவதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, பொத்துவில், நிந்தவூர், இறக்காமம், கல்முனை, சம்மாந்துறை மற்றும் பல பிரதேசங்களிலும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

தாழ்ந்த பகுதிகளில் உள்ள வீதிகள் நீரில் மூழ்கிக் காணப்படுவதால் மக்கள் பிரயாணம் செய்வதில் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால், பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல இராணுவம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. (6-8)

## மாற்றுத்திறனாளிகள் சங்கங்களை மீள இயக்குமாறு

### ஆளுநரிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத்தை மீள இயக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மலரவன், வவுனியா பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்று திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, வடக்கு மாகாண சபை இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர். மேலும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான குவிய மையத்தை (focal point) உருவாக்குமாறும் கேட்டுக் கொண்டனர். இவற்றைச் சாதகமாக ஆராய்வதாக ஆளுநர் உறுதியளித்தார். (6-8-33)



நீளம்பாய்தலில் 13 வயதுப்பிரிவில் தேசியரீதியில் 5 ஆம் இடம்பெற்ற தலைமன்னார் சென் லோரன்ஸ் ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் கியூபட் கேய்ன் எனும் மாணவனை பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் தமிழரசுக்கட்சியின் வன்னித்தேர்தல் தொகுதியில் பாராளுமன்ற வேட்பாளரான அன்ரனி டலிமா கலிஸ்ரா ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சென்று வாழ்த்தியுள்ளனர். (படம்:-சதீஸ்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3266

### நிஷான்




### கலைவாணி

ஆசிரியர்: நியூட்டன ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கும்போது, அவர் தலையில் ஒரு ஆப்பிள் விழ, அவர் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது?

மாணவன்: இப்படி வகுப்பறையில உட்கார்ந்துக்கிட்டு சும்மா புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு இருந்தா ஒண்ணும் கண்டுபிடிக்க முடியாதுன்னு தெரியுது.

### றோயல்




### கனுசிகா




### டானியல்




### பவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயர்தரப்...

எது.

இது குறித்து அனைத்து உயர்தரப் பரீட்சார்த்திகளையும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தமக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையங்கள் தவிர்ந்த வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் அது குறித்து பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும்.

அனர்த்த நிலைமைகளின் கீழ் மாத்திரம் இதற்கான வாய்ப்பு வழங்கப் படுவதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அனர்த்த நிலைமைகளால் உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டதாக இதுவரை பதிவாகவில்லை என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# தலைவர்...

வர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

சிறுவயது முதலே புத்தகம் வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்ட பிரபாகரன், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதை அறிந்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

பிரபாகரனின் பிறந்தநாள் புலத்தில் ஒவ்வொரு வருடமும் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. (ம-7)

# இந்திய...

டிசம்பர் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கை நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்களை கைதுசெய்த கடற்படையினர், மறுநாள் (11) கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் மயிலிட்டித் துறைமுகத்தில் ஒப்படைத்தனர்.

அவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்று 23 மீனவர்களையும் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை டிசம்பர் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார். (ம-7)

# நெடுந்தீவுக்கான...

சீரற்ற காலநிலை காரணமாகவே படகுச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற இடர்தணிப்பு முன்னாயத்தக் கூட்டத்தில், இடர் நிலைமையின்போது தீவகத்திலுள்ள நோயாளர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான உதவிகளை கடற்படையினர் மேற்கொள்ள வேண்டும் எனவும், கடல் மார்க்கமாக பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் விமானப்படையினர் உதவவேண்டும் என்றும் சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்தார்.

அதற்குக் கடற்படையினர் தமது உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தனர்.

அத்துடன் குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து பயணிகளை ஏற்றி இறக்கும் இரண்டு படகுகளையும், புயல் நிலைமை ஏற்பட்டால் பாதுகாத்துத் தருவதற்குக் கடற்படையினரின் உதவியை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கோரினார். அதற்கும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# யாழ்., முல்லை...

மூவரைக் கட்டாயத்தில் ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை மீட்டுத் தருமாறும் உறவினர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 04ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் சகோதரியிடம் செல்வதற்கு 60 இலட்சம் ரூபாய் பணத்தினைச் செலுத்தி பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ரஷ்ய விமான நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து ரஷ்ய நாட்டு இராணுவத்தளபதியின் மூலம் பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள் எனக் கூறப்பட்ட இளைஞனை முகவர் விமானம் ஏற்றியுள்ளார்.

ரஷ்ய விமான நிலையத்தில் இறங்கியவேளை, குறித்த குருநகர் இளைஞனுடன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் மற்றும் முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஆகிய மூவர் பிரான்ஸ் நாட்டுக்கு தம்மை அழைத்து செல்வார் எனக் கூறப்பட்ட இராணுவ அதிகாரிக்காகக் காத்திருந்துள்ளனர்.

அங்கு வந்த இராணுவ அதிகாரி மூவரையும் அழைத்துச் சென்று கட்டாயமாக இராணுவ முகாமில் தங்க வைத்து, அவர்களுக்கு இராணுவ சீருடைகள் வழங்கப்பட்டு 15 நாள் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கி உக்ரைன் நாட்டு எல்லையில் கொண்டு இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் தமது நிலைமை தொடர்பில் தாயாருக்கு கூறியுள்ளதுடன், ரஷ்ய இராணுவத்தில் இணைத்துள்ள படங்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

அதன் பின்னரே மூவரும் ரஷ்ய நாட்டு இராணுவத்தில் இணைக்கப்பட்ட விடயம் உறவினருக்குத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களின் உறவினர்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு வடமாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

# குவைத்...

பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுப் பிற்பகல் குவைத்தில் இருந்து விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தக் கைதிகள் குவைத் அரசின் மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குவைத் அரசுக்கும் இலங்கைக்கும் இடையில் 2007ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் அவர்கள் நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

குவைத் இராச்சியத்தில் போதைப் பொருள் பாவனை, வர்த்தகம், மோசடி மற்றும் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இலங்கைக் கைதிகள் சிலரே இவ்வாறு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கைதிகளுடன் குவைத் அரசின் பாதுகாப்பு அதிகாரிகள், அந்நாட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் அடங்கிய குழுவும் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

தென்மேற்கு வங்காள விரிகுடாப் பகுதியில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றமுழுத்தத் தாழ்வு மண்டலம் மத்திய தென்மேற்கு வங்காள விரிகுடா பகுதியில் காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் வடமேல் திசையில் பயணித்து ஆழமான காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடைந்து நாட்டின் கிழக்கு கடலை அண்மித்து செல்லும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதனிடையே, வட மாகாணத்தின் சில இடங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக் கழகப் புவியியல் துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவிக்கையில்,

இன்று அதிகாலை முதல் குறிப்பாக காலை 7.00 மணி முதல் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மிகக் கன மழை கிடைக்கத் தொடங்கும். பல பகுதிகளுக்கும் வெள்ள அனர்த்த வாய்ப்புண்டு.

இன்று நண்பகலுக்கு பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் கன மழை கிடைக்கத் தொடங்கும். யாழ்ப்பாண மாவட்டத்தின் வெள்ள அனர்த்த வாய்ப்புள்ள மக்கள் இன்று முதல் மிக மிக அவதானமாக இருப்பது அவசியம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் இன்று முதல் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புண்டு.

முல்லைத்தீவிலும் இன்று மாலை முதல் யாழ்ப்பாணத்திலும் பரவலாக இடி மின்னல் நிகழ வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## மறு அறி...

வரை சீரற்ற காலநிலை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் இலங்கையின் கிழக்கு கடற்கரையை நெருங்கி ஆழமான காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## உ/த பரீட்சை...

பிறப்பிக்கக் கோரி மாணவியொருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, டிசெம்பர் 12ஆம் திகதி ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை (25) தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முர்து பெர்னாண்டோ மற்றும் பிரியந்த பெர்னாந்து ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனு பரிசீலிக்கப் பட்டது.

இந்த முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி ஹன்சனி அழகோன் தாக்கல் செய்த மனுவில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சர் திருமதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம-7)

## முல்லை வட்டுவாகலில்
# சாலை கடல் நீரேரி
## கடலுக்கு வெட்டிவிடப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் நந்திக்கடல் நீர் ஏரியும் சாலை கடல் நீரேரியும் கடலுடன் வெட்டிவிடப் பட்டுள்ளன.

அண்மை நாட்களாக பெய்த கடும் மழை வெள்ளத்தால், அந்நீர் ஏரிகளின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதுடன், வட்டுவாகல் பாலத்துக்கு மேல் ஒரு அடி வரை நீர் மூடிக் காணப்பட்டது.

இந்நிலையில் மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கூட்ட தீர்மானத்திற்கமைய நேற்று மாலை 5.30 மணியளவில் பாரம்பரிய முறைப்படி சடங்குகள் மேற் கொள்ளப்பட்டு நந்திக்கடல் நீர் ஏரி வெட்டப்பட்டு, பெருங் கடலுடன் சங்கமிக்க செய்யப்பட்டுள்ளது.

கிராம மக்கள், கடற்படையினர், இராணுவத்தினர், அனர்த்த முகாமைத்துவத்தினர் இணைந்து மேற்கொண்டிருந்தனர். (ம-7,299)

## பல்வேறு...

மத்திய குழுவின் சர்வதேச திணைக்கள உப அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான சீனத் தூதுக்குழு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க பெற்ற வெற்றிக்கும், பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்குக் கிடைத்த அமோக வெற்றிக்கும் வாழ்த்துத் தெரிவித்த சீன உப அமைச்சர், இந்த வெற்றிகளின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள பரிமாற்றங்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இலங்கையுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்பட சீனா தயாராக இருப்பதாகவும் உப அமைச்சர் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர நன்மை பயக்கும் நீண்டகால ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில்நுட்ப பரிமாற்றம், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்க சீனா தயாராக இருப்பதாக தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

குறிப்பாக கல்வித்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு பயிற்சியளித்து இலங்கையின் மனிதவள மேம்பாட்டை மேம்படுத்த சீனா ஆதரவு வழங்கும் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்தினார். (ம-7)

## மாவீரர்...

ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களச் சாவடைந்த லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவாக, அவர் உயிரிழந்த கார்த்திகை 27 ஆம் திகதி, விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால்மாவீரர் தினமாக 1987 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்தவகையில் மாவீரர்களின் உயிர் தியாகத்தினை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கும் வகையில் நாளை தமிழர் தாயகத்தில் உள்ள வீரமறவர்கள் விதைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் காலைமுதல் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவினர்களை மக்கள் நினைவு கூரலாம்.

உறவினர் இறந்ததை சட்டப்படி அனுஷ்டிக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் சின்னத்தையோ சீருடைகளையோ அவர்களின் படங்களையோ பயன்படுத்தி மாவீரர்களை நினைவேந்த இடமில்லை என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 04 - 1939 | 24 - 11 - 2024 |

## திருமதி ஞானம்மா கனகசூரியர்

யாழ். புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம்மா கனகசூரியர் அவர்கள் 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தம்பு - வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசூரியர் அவர்களின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன், வசந்தகுமாரி, பிரேமகௌரி, பிரேமகலா, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சர்வேஸ்வரி, கணேசராஜன் மற்றும் ராஜ்குமார், சத்தியசீலன், புஷ்பராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, ராசம்மா, வைத்திலிங்கம் மற்றும் குழந்தைவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமல், சர்மிலா, மயூரன், சுதர்சன், விதுஷன், வாதுசன், விதுசிகா, ஜதீஸ்வரன், ஆரணி, ஜதுசன், ரூபிகா, அனுசன், வனஜன், மானசி, மஜினன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விதுசிகா, கௌதமன், கபிஷன், விதுஷன், கவிஷன், அஷ்விக், அபிஜெய், அக்ஷியா, ருத்ரன், கதிறன், தீரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 27.11.2024 நாளை புதன்கிழமை காலை 08.00 மணியளவில் இல, 19 ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப் பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.19, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
சந்திரன் - மகன் : +94776617234
கலா - மகள் : +94776176692
தகவல்: குடும்பத்தினர்
(2611)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(2658)

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள் தொடர்புகளுக்கு:
(2415)
075 033 6759

மொத்தக் கொள்வனவு
அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
48/=
80/=
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 121 5546
(577)

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்யப்பட்டு எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500
(2491)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.